[8th December 1959

Exemption has also been granted in respect of the sales of Canteen Stores by the Canteen Stores Department (India), from the combined Retail and Bulk Issue Depot at Fort St. George, Madras, to the units of the Armed Forces situated outside the State of Madras.

SRI J. MATHA GOWDER: எந்தெந்த பொருள்கள் மீது கலால் வரி இருக்கிறதோ, அவைகளின் விற்பனை வரியையும் சேர்த்துக் கொள்வதாக இருக்கிறதா? இது சம்பந்தமான மத்திய சர்க்கார் குழுவில்கூட கனம் நிதி அமைச்சர் அங்கத்தினராக இருக்கிறார்கள். அப்படியானால், கலால் வரியோடு விற்பனை வரியையும் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கேள்வி வேறு விஷயம் பற்றியது. அங்கத்தினர் விரும்பினால், தனிக் கேள்வி போடலாம்.

Madras Cultivating Tenants' Protection Act

* 43 *Q.*—SRI T. S. RAMASWAMY (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cases that are pending under the Madras Cultivating Tenants' Protection Act; and

(*b*) the number that are pending for more than six months?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) 2,136 cases (as on 1st July 1959).

(*b*) 320 cases (as on 1st July 1959).

SRI S. M. ANNAMALAI: இவ்வளவு வழக்குகள் பைசல் ஆகாமல் இருக்கும்போது, தனிக் கோர்ட்டு வைத்தால் அதிக கேஸ்கள் பைசல் ஆகும். அதிகாரிகளே செய்வதால், அவர்களுக்கு பல தொல்லைகள் இருக்கின்றன, ஆதலால் சீக்கிரம் பைசல் ஆவதில்லை. ஆகவே, தனிக் கோர்ட்டு நியமிக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த புள்ளி விவரம் கொடுத்தது ஜூலை மாதம் வரை. அதற்கப்பால், இன்னும் கேசுகள் முடிவாகியிருக்கிறது. ஆறு மாதத்திற்கு மேற்பட்ட கேசுகள் 320 என்று சொன்னேன். ஆனாலும், ரொம்ப துரிதமாகத் தான் பைசல் ஆகின்றன.

MR. SPEAKER: நேற்று கனம் ஸ்ரீ நாகராஜ மணிகார் கேள்வி கேட்டபொழுது சொன்னேன், அங்கத்தினர்கள் அபிப்பிராயம் சொல்ல வேண்டாம், கேள்வியாகக் கேளுங்கள் என்று. கனம் ஸ்ரீ அண்ணாமலை அவர்களையும் அப்படியே கேள்வியாகக் கேட்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI T. SAMPATH: May I know whether the Government have any proposal to vest the jurisdiction in Civil Courts?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.